DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 214/2020

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.நவமணி | **RW1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது புளியங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள புளியங்குடி காவல் நிலைய குற்ற எண்.281/2018 வழக்கில் பதிவு செய்யப்பட்ட அச்சு முதல் தகவல் அறிக்கை வழக்கு புலன் விசாரணையின் போது தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர், மாதிரி வரைபடம் விபத்து சம்பந்தமாக மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய ஆய்வறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை ஆகியவற்றை இன்று நான் தாக்கல் செய்கிறேன். அவை **எ.ம.சா.ஆ 1** வரிசையாகும். மேற்படி வழக்கில் 12.08.2018 அன்று இரவு 10.15 மணியளவில் ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக இராஜேந்திரன் என்பவர் 14.08.2018 ம் தேதி மருத்துவமனையில் வைத்து கொடுத்த புகார் வாக்குமுலத்தின் அடிப்படையில் அச்சு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரத்தில் இந்தவழக்கின் எதிரி யார் என்ற விபரம் தெரியாத சூழ்நிலையில் உரிய புலன் விசாரணைக்கு பின்னர் அருணாசலம் என்பவர் TN 76 F 7894 பதிவெண் கொண்ட ஆட்டோவை கவனக்குறைவாக ஓட்டிச் சென்று தனக்கு தானே

விபத்து ஏற்படுத்திக் கெண்டார் என்ற விபரம் தெரிய வந்த காரணத்தினால் மேல் நடவடிக்கை கைவிடப்படுவதாக சிவகிரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்து நடந்த தேதியில் நான் புளியங்குடி காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். எனவே விபத்து சம்பந்தமாகவும் புலன் விசாரணை சம்பந்தமாகவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். ஆட்டோவை ஓட்டிச் சென்று இந்த விபத்தில் இறந்தவர் அதே ஆட்டோவின் ஓட்டுநர் என்றால் சரிதான். வழக்கு கோப்புகளின் அடிப்படையில் பார்க்கையில் மேற்படி ஆட்டோவின் உரிமையாளர் வேறு ஒரு நபர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் கவனக்குறைவாக ஓட்டி வந்த இருசக்கர வாகனம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அந்த இருசக்கர வாகன ஓட்டுநர் யார் என்ற விபரம் குறித்து புலன் விசாரணையில் துலங்கியதா என்றால்இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எந்தெந்த சாட்சியை விசாரித்து அதன் பின்னர் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டது என்ற விபரம் துலங்காது என்றால் சரிதான். மேற்படி விபத்து வழக்கில் முறையாக புலன்விசாரணை செய்யப்படவில்லை என்றும் நடத்தப்பட்ட விசாரணை ஒருதலைப்பட்சமானது என்றும், எனவே மேற்படி ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi
Date: 2025.11.26 17:50:04 +0530